www.Padasalai.Net www.CBSEtips.in

2MD

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

11 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

மதுரை மாவட்டம் 16-11-22

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

பிரிவு – I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (15*1=15)

1. சுய உதவிக் குழுக்கள் சேமிப்பை பொதுவான நிதியாக மாற்றும்
   அ) பொது நிதி ஆ) குழு தொகுப்பு நிதி
   இ) குழு நிதி ஈ) மேலே எதுவும் இல்லை
2. உற்பத்தித் துறையின் கீழ் ஒரு குறு நிறுவன முதலீட்டு வரம்பு__________ லட்சங்களுக்கு மேல் இல்லை
   அ) 10 ஆ) 20 இ) 25 ஈ) 50
3. வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவது------------
   a) இறக்கு மதி b) ஏற்றுமதி
   இ) மறு ஏற்றுமதி ஈ) மீண்டும் ஏற்றுமதி
4. உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம் ----------------.
   அ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்த
   ஆ) அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை பொருளாதார ரீதியாக வழங்குதல்
   இ) தேசிய வருமானத்தை உயர்த்த
   ஈ) அனைத்து வகையான பொருட்களையும் பெற.
5. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைத்தரகர் யார்?
   அ) மொத்த விற்பனையாளர் ஆ) உற்பத்தியாளர்
   இ)சில்லறை விற்பனையாளர் ஈ) வாடிக்கையாளர்
6. வணிக இடைத்தரகர்களை ---------- வகைகளாக வகைப்படுத்தலாம்.
   அ) மூன்று ஆ) இரண்டு
   இ) ஐந்து ஈ) நான்கு
7. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருள்களை வியாபாரம் செய்வோரை_____என்பர்
   அ) மடங்குகடைகள் ஆ) முகவர்கள்
   இ)தெருக் கடை வியாபாரிகள்
   ஈ) சுற்றாடு ம்வியாபாரிகள்
8. சில்லறை விற்பனையாளர்கள் ___________ அளவில் பொருள்களை கையாள்கின்றனர்
   அ) சிறிய ஆ) பெரிய
   இ) நடுத்தர ஈ) வரையறுக்கப்பட்ட
9. மற்றொரு நாட்டிற்கு மறு ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் _______ என அழைக்கப்படுகிறது.
   அ) இறக்குமதி வர்த்தகம் ஆ) ஏற்றுமதி வர்த்தகம்
   இ) மறு ஏற்றுமதி ஈ) சர்வதேச வர்த்தகம்
10. சொந்த நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு பொருட்களை விற்பது------------என்று அழைக்கப்படுகிறது
    அ) உள் நாட்டு வியாபாரம் ஆ) மறு ஏற்றுமதி
    இ)வெளி நாட்டு வர்த்தகம் ஈ) இணைவினை
11. சரக்கு தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் ரசீது
    அ) அனுப்புகை ரசீது ஆ) கப்பல் ரசீதுகப்பல்
    இ)கப்பல் துணைத் தலைவர் ரசீது
    ஈ) வணிக தூதுவர் ரசீது
12. ------------- என்பது இறக்கு மதியாளரால் தயாரிக்கப்பட்ட ஆவணம், பொருட்களை வாங்க ஏற்று மதியாளருக்கு அனுப்பப்பட்டது
    அ) இடாப்பு ஆ) சரக்காணை
    இ) விசாரணை ஈ) கப்பல் வாடகை முறி
13. WTO இன் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?
    a) நியூயார்க் ஆ) லண்டன்
    இ)ஜெனீவா ஈ) பிரேசில்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

14. பின் வருவனவற்றைப் பொருத்துக:

A) பாரத ஸ்டேட் வங்கி - i) பொதுத் துறை வங்கி
B) ICICI - ii) தனியார் துறை வங்கி
C) பாண்டியன் கிராமப்புற வங்கி - iii) வட்டாரக் கிராமிய வங்கி
D) முத்ராவங்கி - iv) குறும நிதி நிறுவனங்கள்
E) SIDBI - v) வங்கி அல்லாத நிறுவனங்கள்

குறியீடு:

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| அ) | i | ii | iii | iv | v |
| ஆ) | ii | v | i | iii | iv |
| c) | ii | iv | iii | i | v |
| ஈ) | i | iii | ii | iv | v |

15. வலியுறுத்தல் (A): பெரிய வணிக நிறுவனங்களை விட MSME கள் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றன.
காரணம் (R) : ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் உழைப்பாளர்கள் மீது அதிக அக்கறை கொண்டவர்கள், இதனால் அவர்கள் இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குகிறார்கள்.
அ) A மற்றும் R சரியானது மற்றும் A க்கு R சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரியானது மற்றும் R என்பது A க்குதவறான விளக்கம்
இ) A சரியானதுஆனால் R தவறானது ஈ) A தவறானதுஆனால் R சரியானது

## பிரிவு – II (5*2=10)

**குறிப்பு: ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 22 - ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.**

16. குறு நிறுவனங்களுக்கு சில உதாரணங்களைக் கொடுங்கள்.
17. மறு ஏற்றுமதிஎன்பதன் பொருள் யாது?
18. தரகர் என்பவர் யார்?
19. தானியங்கிவிற்பனை இயந்திரங்கள் என்றால் என்ன?
20. ஏற்றுமதி வர்த்தகம் என்றால் என்ன?
21. கடன் கடிதம் என்றால் என்ன?
22. படித்த இளைஞர் திரு. ஆகாஷ் முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற விரும்புகிறார், ஆனால் அவருக்கு வணிகத்திட்டம், கடன் பெறுவதற்கான நிதி நிறுவனங்கள் மற்றும் பலவற்றில் போதுமான அனுபவம் இல்லை. இது போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில், தமிழக அரசு ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த திட்டத்தின் பெயர் என்ன?

## பிரிவு – III (5*3=15)

**குறிப்பு: ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண்.29 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.**

23. தமிழ் நாட்டில் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பட்டியலிடுங்கள்.
24. இந்தியாவின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் மூன்று உதாரணங்களைக் கொடுங்கள்.
25. மொத்த விற்பனையாளர்களின் ஏதேனும் மூன்று பண்புகளை விளக்குங்கள்.
26. சிறப்பங் காடிகளின் பண்புகளை விளக்குங்கள். (ஏதேனும் 3)
27. பன்னாட்டு வணிகத்தின் ஏதேனும் மூன்று அம்சங்களை விளக்குங்கள்.
28. கப்பல் ரசீதிற்க்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள்.(ஏதேனும் 3)
29. குறிப்பிட்ட பயணத்திற்கு கப்பலை வாடகைக்கு எடுப்பது__________என்றும் குறிப்பிட்ட காலத்திற்கு முழுகப்பலையும் வாடகைக்கு எடுப்பது__________என்றும் அழைக்கப்படுகிறது

## பிரிவு – IV (2*5=10)

**குறிப்பு: அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்**

30. சுய உதவிக் குழுக்களின் நோக்கங்கள் என்ன? (ஏதேனும் 5) *(அல்லது)*
உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)
31. துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்களை விவரி. *(அல்லது)*
உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்தை வேறுபடுத்துங்கள். (ஏதேனும் 5)



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**+1வணிகவியல் 2ஆம்பருவத்தேர்வு -மதுரை (மா) நவ22**

1.(ஆ) குழு தொகுப்பு நிதி
2.(இ) 25
3.(அ) இறக்குமதி
4.(ஆ) அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை பொருளாதார ரீதியாக வழங்குதல்
5.(அ) மொத்த விற்பனையாளர்
6.(ஆ) இரண்டு
7.(ஈ) சுற்றாடும் வியாபாரிகள்
8.(அ) சிறய அளவில்
9.(இ) மறு ஏற்றுமதி
10(இ) வெளிநாட்டு வர்த்தகம்
11.(ஆ) கப்பல் இரசீது
12.(ஆ) சரக்காணை
13.(இ) ஜெனீவா
14.(அ) i ii iii iv v
15.(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) (A) விற்கு சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

**16. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள்:** மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்தல், போக்குவரத்து, பழுதுபார்க்கும் கடைகள், குடிசைத் தொழில்கள், சிறிய கைத் தொழில்கள், கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்.

**17. இறக்குமதி வியாபாரம்:** உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்.
எகா:- இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறிக்கலாம்.

**18. தரகர் என்பவர்:** மற்றவர்களுக்காக முன்னின்று பேரம் பேசி, வியாபாரத்தை இலாபக்கரமாக நிறைவேற்றி அதற்கெனக் கழிவு பெறும் நபரையே தரகர் என்பர். அவரது சேவைக்கு வழங்கப்படும் ஊதியம் "தரகு" ஆகும்.

**19.தானியங்கி விற்பனை எந்திரம்:** நாணயங்கள், அட்டைகள் அல்லது வில்லைகள் கொண்டு இயங்கக் கூடியது, வாங்குபவர் நாணயம் அல்லது அட்டையை எந்திரத்தினுள் செலுத்தினால், குறிப்பிட்ட அளவுள்ள பொருள் வெளியில் வரும். அதைப் பெற்றுக் கொள்வர். இவை வங்கிகளில் தானியங்கி ரொக்கம் எடுக்கும் எந்திரம் (ATM) போன்று செயல்படுகிறது. இதனால் எப்பொழுதும் எங்கும் பொருள் எடுத்துக் கொள்ளலாம்.

**20. ஏற்றுமதி வியாபாரம்:** உள் நாட்டிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளை அயல் நாட்டிற்கு விற்பனை செய்வது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.
எகா:- இந்தியாவிலிருந்து தேயிலை ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்வது.

**21. நாணய உறுதி கடிதம்:** இறக்குமதியாளர் மீது, ஏற்றுமதியாளர் மாற்று முறை தன்னிடம் வரும் போது, அதற்குப் பணம் தருவதாக, இறக்குமதியாளரின் வங்கி அளிக்கும் உறுதிமொழி அடங்கிய கடிதமே நாணய உறுதி கடிதம் ஆகும். நன்கு அறிந்த இறக்குமதியாளருக்கு மட்டுமே இது வழங்கப்படும்.

**22.புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் 2013 (NEEDS)**

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

**23. தமிழ்நாட்டில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.** தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலும், பல்வேறு விதமான பொருட்களைத் தயாரிக்கின்றன.
ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உதவிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயணம், நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் முதலானவை.

**24.இந்தியாவில் இறக்குமதி பொருட்கள்:**
எண்ணை முதலான சுரங்க எரிபொருட்கள்
வைரம் மற்றும் விலையுர்ந்த பொருட்கள்
மின்சார இயந்திர சாதனங்கள்
கணினி உள்ளிட்ட இயந்திரங்கள்
ஆர்கானிக் கெமிக்கல்
**ஏற்றுமதி பொருட்கள்:** பெட்ரோலிய பொருட்கள்
நகைகள்
ஆட்டோமொபைல்ஸ்
பயோகெமிக்கல்ஸ்
மருந்து பொருட்கள்

**25. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்று:**
மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
இவர்கள் பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
ஒரு குறிப்பிட்ட பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.
பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

இவ்வகை வியாபாரத்திற்குப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
சில்லறை வியாபாரிகளுக்கு இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
உற்பத்தியாளர்களுக்கும் இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.
நகரங்கள், பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

**26. சிறப்பங்காடிகளின் பண்புகள் விளக்குக.**
சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின் மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும்.
பொருள்கள்யாவும் விலை, தரம் மற்றும் ரகம் வாரியாக, அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
வாடிக்கையாளர்கள் தேவையான பொருள்களை, தானே எடுத்து வந்து காசாளரிடம் உரிய தொகையினை செலுத்தி விட்டு, வீட்டுக்கு எடுத்துச் செல்வர்.
இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு. கடன் விற்பனை கிடையாது.
துறைவாரிப் பண்டக சாலை போன்று அமைந்திருப்பதால், ஒரே கூரையான கீழ் அனைத்து வகைப் பொருள்களையும், வாடிக்கையாளர்கள் வாங்க முடிகிறது.
இதை அமைக்க, அதிக முதலீடு தேவைப்படுகிறது.

**27. பன்னாட்டு வணிகத்தின் சிறப்பம்சம்: வளங்களின் சமமற்ற பகிர்வு:-**
உலக நாடுகள் அனைத்தும் எல்லா இயற்கை வளங்களையும் சமமாகவோ அல்லது சமனற்ற முறையிலோ வளங்களை பெற்றிருக்கின்றன. இதன் காரணமாக இயற்கை வளங்களை உபரியாக கொண்டுள்ள நாடுகள் தங்கள் நாட்டில் கிடைக்காத பற்றாக்குறையான வளங்களை கொண்டுள்ள நாடுகளோடு பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டியதாகிறது.
**உற்பத்திக் காரணிகளின் சீரற்ற கிடைப்புத் தன்மை:-**நாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகளின் (நிலம், உழைப்பு, முதல் மற்றும் தொழில் நுட்பம்) கிடைப்புத் தன்மை சீரற்ற முறையில் அமைந்துள்ளது. பன்னாட்டு வணிகம் ஒரு நாட்டில் கூடுதலாக உள்ள உற்பத்தி காரணியை தேவையுள்ள மற்ற நாட்டிற்கு மாற்றுவதற்கு பன்னாட்டு வணிகம் வழி வகுக்கிறது.
**சிறப்புத் தேர்ச்சி:-**சில நாடுகள் அல்லது குறிப்பிட்ட நாட்டின் சில பகுதிகள், திறமையான உழைப்பாளிகள், சாதகமான பருவ நிலை, இயற்கை வளங்களின் கிடைப்புத் தன்மை மற்றும் தொழில் நுட்ப அறிவு போன்ற காரணிகளால் சில பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.
**அடக்கவிலைக் குறைவு:-**உலக நாடுகளுக்கிடையே பொருட்களுக்கான உற்பத்தி செலவு, சமூக பொருளாதார புவியியல், மக்கள் தொகை, தொழில் நுட்ப மற்றும் நிலவும் அரசியல் சூழல் காரணமாக வேறுபடுகிறது. இதன் காரணமாக சில நாடுகள் மற்ற நாடுகளை விட மிக விலை குறைவாகவும் தரமானதாகவும் பொருட்களை உற்பத்தி செய்கின்றன.

| 28. கப்பல் ரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|
| இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணம் ஆகும். | இது சரக்கை அனுப்ப மொத்த கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும். |
| இதை எளிதில் மேல் எழுதுதல் வாயிலாக, மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியும். | இதை மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியாது. |
| இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம். | இதை பிணையமாக வைத்து கடன் பெற முடியாது. |
| இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் அல்ல. | இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் ஆகும். |

29. குறிப்பிட்ட பயணத்திற்கு கப்பலை வாடகைக்கு எடுப்பது **கப்பல் பயண வாடகை முறி** என்றும் குறிப்பிட்ட காலத்திற்கு முழு கப்பலையும் வாடகைக்கு எடுப்பது **கப்பல் வாடகை முறி** .

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**
**30.அ. சுய உதவி குழுக்களின் நோக்கங்கள்**
பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது.
முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்.
பெண்களிடம் திறமையை உருவாக்கி, ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபட செய்வது.
பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களின் மனங்களில், சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்.
பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்.
கடன் வட்டம் அல்லது சுழல் நிதி மற்றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
உறுப்பினர்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
எதிர்காலப் பொருளாதார அதிகார மேலாண்மையை திறமையை வளர்த்தல் மற்றும் கடன் தொடர்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

உறுப்பினர்கள் தங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்கு அவர்களாகவே தீர்வு காண்பதற்கான விழிப்புணர்வு பயிற்சியினை அளித்தல்.
குழு உறுப்பினர்களின் பொதுவான விருப்பங்களை அறிந்து, குழு நடவடிக்கைகளை முடிவு செய்தல், திறமைகயான மற்றும் சிக்கனமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் அனைத்துச் சமூகப் பொருளாதாரத் தடைகளையும் வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களை தயார்படுத்துதல்.

**30. ஆ. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள்**
ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
உள்நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.
உள்நாட்டு உற்பத்தியாளர் நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
உள்நாட்டு வியாபாரம், இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.
இதில் போக்குவரத்து இடர்பாடு, பன்னாட்டு வணிகத்தை விட குறைவாகவே உள்ளது.
உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.
இதன் நோக்கம், அத்தியாவசியப் பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்.
உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மட்டுமே இடம் பெறும்.
ஒரே நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து பொருட்களை வாங்கப்படுகிறது.
உள்நாட்டுப் போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் வினியோகம் செய்யப்படுகிறது.
இதில் சுங்கவரி, இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை.

**31.அ. துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.**
**பேரளவு அமைப்பு:-**அதிக முதலீடு செய்து, உருவாக்கப்பட்ட கூட்டுப்பங்கு நிறுமத்தின் இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படும் பெரிய சில்லறை வியாபார நிறுவனம் துறைவாரிப் பண்டக சாலை ஆகும்.
**பல்பொருள் விற்பனை:-** மனிதனுக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும், ஒரே இடத்தில் "குண்டூசி முதல் வாகனம் வரை" விற்பனை செய்யப்படுவதால், நுகர்வோர் வேண்டியதை வாங்கிப் பயன்பெற முடியும். மேலும் ஒரே பொருளின் பலவகைகளும் இங்கு கிடைக்கும்.
**துறைகளின் ஒருங்கிணைப்பு:-**பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு வகையான பொருள்களை தனித்தனியாக விற்பனை செய்யப்படுகின்றன.
**வாங்கும் வசதிகள்:-** வாடிக்கையாளர்களுக்கு ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம், பொழுது போக்கு வசதிகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதால், குடும்பமாக வந்து பொருள்களை வாங்க முடிகிறது.
**மையக் கொள்முதல்:-** அனைத்து வகைப் பொருள்களும், ஒரு மையத்தின் மூலம் நேரடியாக தயாரிப்பாளரிடமிருந்து, பேரளவு கொள்முதல் செய்யப்படுகிறது.

**31.ஆ.**

| உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| இது ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். |
| ஒரே நாட்டில் உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். |
| ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. | பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. |
| உள்ளூர் நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | அயல்நாட்டு நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |
| இதில், சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | கப்பல் மற்றும் விமான போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. |
| இடரின் அளவு குறைவு | தொலை தூரம், சமூக பொருளாதார அரசியல் நிலைகள் மற்றும் அயல் நாட்டு நாணய மதிப்பில் ஏற்படும் மாற்றம் போன்ற காரணங்களால் இடர் அதிகமாகிறது. |
| ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டது | ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து செல்கிறது. |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593